புள்ளியியல்-2

மாதிரி வினாத்தாள்-2

11th Standard

**வணிகக் கணிதம்**

Reg.No. :

# I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

Time : 00:45:00 Hrs | Total Marks : 35

பகுதி-அ 7 x 1 = 7

1) $P(A/B)$ =

(a) $\frac{P(A\cap B)}{P(A)}$ (b) $\frac{P(A\cap B)}{P(B)}, P(B)=0$ (c) $\frac{P(A\cap B)}{P(B)}, P(B)\neq 0$ (d) இதில் ஏதுமில்லை

2) எல்லா உறுப்புக்களையும் அடிப்படையாக கொண்டவை எது?

(a) வீச்சு (b) இடைநிலை (c) சராசரி (d) முகடு

3) கீழ்கண்டவற்றில், கடைசி உறுப்புக்களால் பாதிக்கப்படாதது என்ன?

(a) இடைநிலை (b) சராசரி (c) முகடு (d) திட்ட விலக்கம்

4) சராசரி, இடைநிலை மற்றும் முகடு ஆகியவற்றிற்கு இடையே உள்ள அனுபவ தொடர்பு என்ன?

(a) சராசரி - முகடு = 3 இடைநிலை (b) சராசரி - முகடு = 2 (சராசரி - இடைநிலை) (c) சராசரி - முகடு = 2 சராசரி

(d) சராசரி = 3 இடைநிலை - முகடு

5) திட்டவிலக்கத்தின் விர்க்கம் என்பது?

(a) சராசரி விலக்கம் (b) கால்மான விலக்கம் (c) மாறுபாடு (d) வீச்சு

6) A மற்றும் B ஆகியவை ஒன்றுக்கொன்று தொடர்பற்ற நிகழ்ச்சிகள் எனில் $P(A\cap B)$

(a) $P(A)P(B)$ (b) $P(A)+P(B)$ (c) $P(A/B)$ (d) $P(B)-P(A)$

7) கீழ்க்கண்டவற்றில் எது சரி

(a) இசைச் சராசரி $\leq$ பெருக்குச் சராசரி $\leq$ கூட்டுச் சராசரி (b) இசைச் சராசரி $\geq$ பெருக்குச் சராசரி $\geq$ கூட்டுச் சராசரி

(c) கூட்டுச் சராசரி $<$ பெருக்குச் சராசரி $<$ இசைச் சராசரி (d) இதில் ஏதுமில்லை

பகுதி-ஆ 6 x 2 = 12

8) ஒரு முழுமையான பகடை இருமுறை வீசப்படும் பொழுது, எண்களின் கூடுதல் 9 பெறுவதற்கான நிகழ்தகவைக் கண்டுபிடிக்கவும்.

9) 4 வெள்ளை, 6 கருப்பு பந்துகளைக் கொண்ட ஒரு பையிலிருந்து, சமவாய்ப்பு முறையில் இரண்டு பந்துகள் எடுக்கப்படுகிறது. (i) இரண்டும் வெள்ளையாக மற்றும் (ii) இரண்டும் கருப்பாக இருப்பதற்கான நிகழ்தகவு என்ன?

10) {1, 2, 3,....100} லிருந்து ஒரு எண் தேர்ந்தெடுக்கப்படும் பொழுது அவ்வெண் (i) வர்க்க எண்ணாக (ii) 3 அல்லது 7ன் பெருக்கமாக.

11) ஒரு பையில் 4 வெள்ளை, 5 கருப்பு மற்றும் 6 சிவப்பு பந்துகள் உள்ளன. சமவாய்ப்பு முறையில் ஒரு பந்து எடுக்கப்படும் போது, அப்பந்து சிவப்பு அல்லது வெள்ளை நிறமாக இருப்பதற்கான நிகழ்தகவு என்ன?

12) இரண்டு பகடைகள் ஒரே சமயத்தில் வீசப்படும் போது, அவ்விரண்டு நாணயங்களின் மேல் காணப்படும் எண்களின் கூடுதல் 10க்கு மிகையாக இருப்பதற்கான நிகழ்தகவு என்ன?

13) ஒரு நபர் 4-ல், 3 முறை இலக்கை எய்துவார் எனவும், மற்றொரு நபர் 3-ல் 2 முறை இலக்கை எய்துவார் எனவும் தெரிகிறது. இரு நபர்களும் சுடும் பொழுது, இலக்க எய்தப்படுவதற்கான நிகழ்தகவு என்ன?

பகுதி-இ 2 x 3 = 6

14) விலக்கு முறையை பயன்படுத்தி, கீழ்க்காணும் தொகுப்பில் உள்ள உறுப்புகளுக்கு திட்டவிலக்கம் காண்க.

45, 36, 40, 36, 42, 45, 35, 40, 39.

15) கீழ்காணும் விவரங்களுக்கு கூட்டுச்சராசரி ஆகியவற்றை பயன்படுத்தி திட்டவிலக்கம் காண்க.

25, 32, 43, 53, 62, 59, 48, 31, 24, 33

பகுதி-ஈ 2 x 5 = 10

16) கீழ்கண்டவற்றிற்கு கூட்டுச்சராசரி காண்.

| ஊதியம் (ரூ.) | 100-119 | 120-139 | 140-159 | 160-179 | 180-199 |
|---|---|---|---|---|---|
| தொழிலாளர்களின் எண்ணிக்கை | 18 | 21 | 13 | 5 | 3 |

17) ஓர் அலுவலகத்திலுள்ள நபர்களின் இடைநிலை எடையை கீழ்காணும் விவரங்களிலிருந்து காண்க.

| எடை (கி.கி) | 60-62 | 63-65 | 66-68 | 69-71 | 72-74 |
|---|---|---|---|---|---|
| நபர்களின் எண்ணிக்கை | 20 | 113 | 138 | 130 | 19 |

*******************************************